## நவம்பர்– 04– பொதுக்கால 31ம் ஞாயிறு

**“உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழுமனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக’ (மாற் 12:30)**

### முதல் வாசகம் : இணைச்சட்டம் 6 : 2 - 6

மோசே மக்களை நோக்கிக் கூறியதாவது : நீங்களும் உங்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி நான் உங்களுக்குக் கட்டளையிட்ட எல்லா நியமங்களையும் கட்டளைகளையும் உங்கள் வாழ் நாளெல்லாம் கடைப்பிடிப்பீர்களாக! இதனால், நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்.இஸ்ரயேலே, அவற்றிற்குச் செவிகொடு! அவற்றைச் செயல்படுத்த முனைந்திடு! அதனால், உன் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு வாக்களித்தபடி, பாலும் தேனும் நிறைந்துவழியும் நாட்டில் நீ நலம் பல பெற்று மேன்மேலும் பெருகுவாய். இஸ்ரயேலே, செவிகொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர்.உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக! இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும்.

**பதில்பாடல் :** என் ஆற்றலாகிய ஆண்டவரே உம்மிடம் நான் அன்பு கூர்கிறேன்.

### இரண்டாம் வாசகம் : எபிரேயர் : 7 : 23 – 28

சகோதர சகோதரிகளே! லேவிய குலத்தைச் சேர்ந்த குருக்கள் சாவுக்கு ஆளானவர்களாய் இருந்ததால் தம்பணியில் நிலைத்திருக்க முடியவில்லை. வேறு பலர் தொடர்ந்து குருக்களாயினர். இவரோ, என்றென்றும் நிலைத்திருப்பதால், மாறாத குருத்துவப் பணியைப் பெற்றுள்ளார்.ஆதலின், தம் வழியாகக் கடவுளிடம் வருபவரை அவர் முற்றும் மீட்க வல்லவராயிருக்கிறார் அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே உயிர்வாழ்கிறார். இத்தகைய தலைமைக் குருவே நமக்கு ஏற்றவராகிறார். இவர் தூயவர், கபடற்றவர், மாசற்றவர், பாவிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, வானங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர்.ஏனைய தலைமைக் குருக்கள் செய்வது போல, முதலில் தம்முடைய பாவங்களுக்காகவும் பின்னர் மக்களுடைய பாவங்களுக்காகவும் இவர் நாள்தோறும் பலி செலுத்தத் தேவையில்லை. ஏனெனில் தம்மைத் தாமே பலியாகச் செலுத்தி இதை ஒரே ஒருமுறைக்குள் செய்து முடித்தார்.திருச்சட்டப்படி வலுவற்ற மனிதர்கள் குருக்களாக ஏற்படுத்தப்படுகிறார்கள். ஆனால் அத்திருச்சட்டத்திற்குப் பின்னர், ஆணையிட்டுக் கூறப்பட்ட வாக்கின் மூலம் என்றென்றும் நிறைவுள்ளவரான மகனே குருவாக ஏற்படுத்தப்படுகிறார்.

### நற்செய்தி : மாற்கு 12 : 28 – 34

அக்காலத்தில், மறைநூல் அறிஞருள் ஒருவர், இயேசு அவர்களுக்கு நன்கு பதில் கூறிக்கொண்டிருந்ததைக் கண்டு அவரை அணுகி வந்து, ”அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?” என்று கேட்டார். அதற்கு இயேசு, ”இஸ்ரயேலே கேள். நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர்.உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழுமனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக” என்பது முதன்மையான கட்டளை.” உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக” என்பது இரண்டாவது கட்டளை. இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை” என்றார். அதற்கு மறைநூல் அறிஞர் அவரிடம், ”நன்று போதகரே, ”கடவுள் ஒருவரே அவரைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை” என்று நீர் கூறியது உண்மையே. அவரிடம் முழு இதயத்தோடும் முழு அறிவோடும் முழு ஆற்றலோடும் அன்பு செலுத்துவதும், தன்னிடம் அன்புகொள்வது போல் அடுத்திருப்பவரிடம் அன்பு செலுத்தவதும் எரிபலிகளையும் வேறுபலிகளையும்விட மேலானது” என்று கூறினார்.அவர் அறிவுத்திறனோடு பதிலளித்ததைக் கண்ட இயேசு அவரிடம், ”நீர் இறையாட்சியினின்று தொலையில் இல்லை” என்றார். அதன்பின் எவரும் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

**தியானம்:** நாம் கடவுளை எமது முழு மனதுடன் அன்பு செய்து வாழவேண்டும் என்ற கருத்தை இன்றைய வாசகங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இன்று எமது அன்பு எங்கே உள்ளது? அது இவ்வுலகின் போக்கில் போகின்ற அன்பாக நிலையற்ற பொருட்கள் மீது கொண்ட அன்பாக, ஆடம்பர வாழ்வில் கொண்ட அன்பாக மாறிவிட்டது, உண்மை அன்பை கண்டு கொள்ள முடியவில்லை. நிலையற்ற அன்பால் மனமுடைந்து போனவர்களும் உண்டு. அன்பு முறிந்து போனதால், போதை வஸ்த்து பழக்கத்திற்கு அடிமையானவர்களும், குடி போதைக்கு அடிமையானவர்களும் பலர். நிலையற்ற அன்பால் ஏமாந்தவர்களும் உண்டு, ஏமாற்றப் பட்டவர்களும் உண்டு. பல ஏமாற்றங்கள் தற்கொலையில் கூட முடிவடைந்துள்ளன. நிலையான அன்பு எது என்று தெரியாமல் வாழ்பவர்களும் உண்டு. இவர்களைப் பார்த்து “உன்னைப் படைத்த உன் கடவுளை முளுமனதுடன் அன்பு செய் “ என்று கூறுகின்றார் யேசு. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே உள்ள அன்பு காலப் போக்கில் மாறிவிடுகின்றது. கணவன் மனைவி அன்பும் நிரந்தரமில்லாத அன்பாக இருப்பதனால்தான் இன்று விவாகரத்துக்கள் அதிகமாகி விட்டது. சகோதர அன்பு பணத்தாலும், சொத்துப்பிரச்சனையாலும் விலை பேசப் படுகின்றது. சுயலாபம் தேடும் அன்பு தேவை முடிந்தபின் காணாமல் போய்விடுகின்றது. அடுத்தவர்களிடத்தில் அன்பு இருந்தால் இன்று உலகில் இடம்பெறும் பல வன்முரைகள் முடிவிற்கு வந்துவிடும். இது சாத்தானுக்கு பிடிக்காத படியால்தான் மனித மனங்களில் குடிகொண்டு பல வன்முறைகளுக்கு அவர்களை தூண்டுகின்றான். இதற்கு இடம் கொடாதபடி நாம் வாழ வேண்டும். கடவுளை எமது உள்ளத்தில் குடிகொள்ள வைத்தோம் என்றால் அங்கே சாத்தானுக்கு என்ன வேலை? சிந்திப்போம்.